# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss

Postfach 439, 4528 Zuchwil

www.maveerarnaal.ch trfswiss@gmail.com


**13 வயதுப்பிரிவு**
(01.01.2004 – 31.12.2005 வரையில் பிறந்தோர்)

## வீழாது எம் வீரம்

"ஒற்றைத் தமிழ்மகன் உள்ளவரை உள்ளத்தே
அற்றைத் தமிழ்த்தாய் ஆட்சி புரியும் வரை
மற்றை இனத்தார்க்கே மண்டியிடான்; மண்டியிட்டால்
பெற்றவர் மேல் ஐயம்; பிறப்பின் மேல் ஐயமெனச்
சற்றும் தயக்கமின்றிச் சாற்று"

என்றார் மானத் தமிழ்ப் புலவர். அவர் பெருங்குமுறல் நாடி, நரம்பெல்லாம் ஓடி உரமேற தானைப் படை நடத்தி ஈனர் பகை எதிர்க்க களம் அமைத்தார் எம் தலைவர். அவரைத் தாங்கி கரம் சேர்த்து வீரம் படைத்தெழுந்தார் ஈழப்புலிமறவர்.

தமிழர் வையகத்தின் மூத்தகுடி. தொன்மையும் செழுமையும் மிக்க தமிழ்மொழி எங்களது தாய்மொழி. அறமும், அடிபணியாத வீரமும், ஆய்ந்து அறிந்த கல்வியும் எமது சொத்துகள். 'வீரம்' தமிழ் இனத்தின் முதுசொம். காலத்தின் நீட்சியில் கரைந்தழிந்து விடாமல் பதியமிட்டுப் பதியமிட்டுப் பக்குவமாய் வளர்த்தெடுக்கப்பட்டது தமிழினத்தின் இனமான உணர்வு. 'வையகத்தின் உச்சத்தில் வளர்ந்து நின்ற ஓர் இனத்தின் பிள்ளை நான்' என்று மார்தட்டிக் கொள்கின்றேன்.

ஈழம் முழுவதையும் நாற்பத்துநான்கு ஆண்டுகள் நல்லாட்சி புரிந்த எல்லாள மாமன்னன், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என மாறிமாறி ஈழத்தை ஆள நினைத்த அந்நியரை எதிர்த்து நின்ற சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்ற முந்தைத் தமிழ்மன்னர்கள் வழிவந்த வீரப்பரம்பரை நாங்கள். தாய்மண்ணைக் காக்கின்ற உயரிய பணிக்கு தாம் பெற்றெடுத்த ஒற்றை மகனைக் கூட செருக்களம் அனுப்பி வைத்த வீரத்தாய்மாரை வரமாகப் பெற்றவர்கள் நாம். எம்மினத்தின் வீரம் என்பது கருவோடு உயிர் கொண்டது. களங்கம் அற்றது. கபடம் அறியாதது. அறத்தின் வழியிலே வளம் பெற்றது.

அதனால் தான், வரித்துக் கொண்ட கொள்கையில் வளைந்து கொடாது அறப்போரிலும் ஆயுதப்போரிலும் சிகரம் தொட்டு நின்றது தமிழீழ விடுதலைப் போராட்டம். தியாகதீபம் திலீபன் மாமாவும் அன்னை பூபதியும் தொடுத்த அறப்போர் இந்திய வல்லாதிக்கத்திற்குப் பாடம் புகட்டியது. எமது விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டியது. அத்தோடு முடிந்ததா ஈகத்தின் எல்லை? அப்துல் றவூப் தாத்தா முதல் முத்துக்குமார் அண்ணா, செங்கொடி அக்கா, செந்தில்குமரன் மாமா என தீயினில் கருவாகித் தமிழீழ விடுதலைக்கு வலுச்சேர்த்து நிற்கின்றனர் ஈகியர்கள். இன்றும் தொடர்கிறது உரிமைக்கான அறவழிப் போராட்டங்கள்.

மரபுவழி இராணுவமாகப் பிறப்பெடுத்து தரைப்படை, கடற்படை, வான்படை எனும் முப்படையும், கந்தகம் சுமந்து இலக்குகளைத் தேடிச்சென்று வெடித்துச் சிதறுகின்ற கரும்புலிப்படையும் அணிசேர, படை வலுச்சமனிலை மேலோங்கி நிமிர்ந்து நின்றது தமிழீழ விடுதலைப் போராட்டம். அது பதித்த வெற்றிச் சரித்திரங்கள் காலத்தால் அழியாதவை. முதல் மாவீரர் சங்கர் மாமா தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரை காவியம் படைத்த அத்தனை மாவீரர்களும் எங்கள் வீரத்தின் வித்துகள். 'தமிழர் என்று ஓர் இனமுண்டு; தனியே அதற்கோர் குணமுண்டு' என்பதை மீண்டும் மீண்டும் வையகத்துக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்ற எங்கள் தேசத்து நாயகர்கள் அவர்கள்.

சாகின்ற கணம் வரை, தாம் நேசித்த தலைவனையும் மக்களையும் தாய்மண்ணின் விடிவையும் மட்டுமே சுவாசித்துச் சென்ற உத்தமர்களின் அளப்பரிய தியாகங்கள் வீணாகிப் போய்விடாது. காலம் கற்றுத் தந்த பாடங்கள் ஒவ்வொன்றும் காத்திரமானவை. விடுதலை வாழ்வின் நேத்திரம் சொல்பவை. ஒன்றுபடுவோம். வெற்றி எமதென்று உறுதி கொள்வோம். வீழாது எம் வீரம். விடுதலை பெறும் வரை ஓயாது எம் வேகம்.

நன்றி,
வணக்கம்.